மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், ஓட்டப்பிடாரம்.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII,Cr.P.C)

| | | |
|---|---|---|
| வழக்கு எண். | : | CC 234/2025 |
| பெயர் | : | சுதந்திரகனி (PW2) |
| க/பெ | : | போத்திநாராயணன் |
| வயது | : | |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| Calling | : | |

(Accused Pothinarayanan is produced from Judicial Custody. )

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 31st day of October 2025

<u>முதல் விசாரணை</u>

1)நான் புதியம்புத்தூர் சந்தனமாரியம்மன் கோவில் தெருவில் வசிக்கிறேன்.நான் டெய்லராக வேலை செய்கிறேன்.அசா1 ஐ தெரியும்.அவர் என் அக்கா.சாட்சி மகேந்திரன் என் அக்கா மகன்.ஆஜர் எதிரியை தெரியும் அவர் என் கணவர்.

2)21.08.2025 ஆம் தேதி நான் என் வீட்டில் இருக்கும்போது எனது கணவர் அடித்து விட்டதால் நான் காலை 8 மணிக்கு எனது அக்கா வீட்டிற்கு சென்றேன்.எனது அக்கா வீட்டில் நானும் எனது அக்கா மகன் மற்றும் என் அக்காவும் இருந்தோம் .அப்போது எனது கணவர் அங்குவந்து எனது அக்காவை பார்த்து தேவிடியா, கண்டாரஓழி என்று அசிங்கமாக பேசினார்.அதன்பிறகு என்னை கூப்பிட்டார் நான் வரமாட்டேன் என்று சொன்னேன்.கத்தரிக்கோலை வைத்து என்னை குத்திபுடுவேன் என்று சொன்னார்.எனது அக்காவை அசிங்கமாக பேசியவுடன் நான் காவல்நிலையத்திற்கு சென்றுவிட்டோம்.என்னிடம் காட்டப்படும் கத்தரிக்கோல் தான் ஆஜர் எதிரி என்னை வைத்து மிரட்டிய கத்தரிக்கோல்.போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) எனது மகள் பெயர் என்ன என்றால் பிரியதர்ஷினி.எனது மகள் ஆர்சி தெருவைச் சேர்ந்த ஒரு பையனை காதலித்து வந்தார் என்றாலும் அதற்கு என் கணவர் சத்தம் போட்டார் என்றாலும் சரிதான்.அந்த பையன் வேறு சமுதாயத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான்.இந்த வழக்கிற்கு முன்பாக எங்கள் மகள் யாரிடமும் கேட்காமல் எனது கணவர் மீது ஒரு புகார் மனு கொடுத்து அது வழக்காகி

உள்ளது என்றால் சரிதான்.எனது கணவரை நானும் எனது மகனும் தான் ஜாமீன் எடுத்தோம் என்றால் சரிதான்.சிறையில் இருந்து வந்தபிறகு எனது கணவர் டெயிலர் வேலைக்கு சென்று நல்லபடியாக தான் இருந்தார் என்றால் சரிதான்.எனது மகள் பிரியதர்ஷினி எனது கணவர் மீது புகார் கொடுத்தபிறகு நாகர்கோவிலில் உள்ளார் என்றால் சரிதான்.எனது கணவர் என்னிடம் எனது மகள் வெளியூரில் வேலை பார்க்க வேண்டாம் என்றும் வீட்டில் வந்து இருக்கட்டும் என்று சொன்னார் என்றால் சரிதான்.அதனால் தான் எங்களுக்குள் சண்டை வந்தது என்றால் சரிதான்.சிலிண்டர் திறந்துவிட்டு கொன்றுவிடுவேன் என்று சொன்னார்.

2)எனக்கும் என் கணவருக்கும் காலையில் எத்தனை மணிக்கு சண்டை நடந்தது என்றால் 8 மணிக்கு சண்டை நடந்தது.எங்கள் வீட்டிற்கு அருகில் உள்ள நபர்களுக்கு மேற்படி சண்டை குறித்து தெரியுமா என்றால் தெரியாது.எனது வீடும் என் அக்கா வீடும் எவ்வளவு தொலைவில் உள்ளது என்றால் அரை கிலோ மீட்டர் தூரம் இருக்கும்.நான் காவல்நிலையம் எத்தனை மணிக்கு சென்றேன் என்றால் காலை 9 மணிக்கு சென்றேன்.என்னிடம் காவல்நிலையத்தில் போலிசார் எத்தனை கையெழுத்து வாங்கினார்கள் என்றால் ஒரு கையெழுத்து வாங்கினார்கள்.எனக்கு எழுத படிக்க தெரியாது.என் அக்காக்கும் எழுத படிக்க தெரியாது என்பதால் போலிசார் எழுதி எங்கள் இருவரிடமும் கையெழுத்து வாங்கினார்கள் என்றால் இல்லை எனது அக்கா மகன் எழுதியதில் தான் கையெழுத்து செய்தோம்.என்னிடம் காட்டிய கத்தரிக்கோலை போலிசார் எனது வீட்டில் இருந்து எடுத்து வந்தார்கள் என்றால் எங்கிருந்து எடுத்துவந்தார்கள் என்று எனக்கு தெரியாது.

3)நாங்கள் காவல்நிலையம் செல்வதற்கு முன்பாகவே எனது கணவர் காவல்நிலையத்தில் நிறுத்தி வைத்திருந்தார்கள் என்றால் நான் அதை பார்க்கவில்லை.நான் சொன்ன மாதிரி நான் சொன்ன தேதியில் எனது கணவர் என்னிடம் சண்டை போட்டதாக சொல்வதும் எனது அக்காவை அசிங்கமாக பேசியது என்று சொல்வதும் என்னை கத்தரிக்கோலை வைத்து மிரட்டியதாக சொல்வதும் பொய் என்றாலும் அவ்வாறு எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் சரியல்ல.நான் எனது மகளை எனது கணவர் சத்தம் போட்டதால் தான் நடக்காத சம்பவத்தை மிகைப்படுத்தி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒப்பம் /– திருமதி.ப.சுமதி
மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நடுவர்,
ஓட்டப்பிடாரம்.